## ஜனவரி – 17 – வியாழன்

### புனித வனத்து அந்தோனியார்

"வாருங்கள் தாள் பணிந்து அவரைத் தொழுவோம்
நம்மை உருவாக்கிய ஆண்டவர்முன் முழந்தாளிடுவோம்" – திபா 95 : 6

### முதல் வாசகம் : எபிரேயர் 3 : 7 – 14

சகோதர சகோதரிகளே!, தூய ஆவியார் கூறுவது "இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களென்றால், பாலை நிலத்தில் சோதனை நாளன்று கிளர்ச்சியின்போது இருந்ததுபோல, உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள். அங்கே உங்கள் மூதாதையர் நாற்பது ஆண்டுகள் என் செயல்களைக் கண்டிருந்தும் என்னைச் சோதித்துப் பார்த்தனர். எனவே, அத்தலைமுறையினர் மீது வெறுப்புக்கொண்டு, "எப்போதும் இவர்களது உள்ளம் தவறுகிறது என் வழிகளை இவர்கள் அறியாதவர்கள் எனவே நான் சினமுற்று "நான் அளிக்கும் இளைப்பாற்றியின் நாட்டிற்குள் நுழையவே மாட்டார்கள்" என்று ஆணையிட்டுக் கூறினேன்" என்றார் கடவுள். அன்பர்களே, நம்பிக்கை கொள்ளாத தீய உள்ளம், வாழும் கடவுளை விட்டு விலகும். இத்தகைய தீய உள்ளம் உங்களுள் எவருக்கும் இராதபடி பார்த்துக்கொள்ளுங்கள். உங்களுள் எவரும் பாவத்தால் ஏமாற்றப்பட்டு, கடின உள்ளத்தினர் ஆகாதவாறு, ஒவ்வொரு நாளும் "இன்றே" என எண்ணி, நாள்தோறும் ஒருவருக்கொருவர் அறிவுரை கூறுங்கள். தொடக்கத்தில் நாம் கொண்டிருந்த திட நம்பிக்கையை இறுதிவரை உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தால் நாமும் கிறிஸ்துவின் பங்காளிகளாவோம்.

**பதில்பாடல் :** உங்கள் இதயத்தைக் கடிணப்படுத்தாதீர்கள்.
ஆண்டவர் குரலுக்குச் செவிசாயுங்கள்.

### நற்செய்தி : மாற்கு 1 : 40 – 45

ஒரு நாள் தொழுநோயாளர் ஒருவர் இயேசுவிடம் வந்து, "நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என்று முழந்தாள் படியிட்டு வேண்டினார். இயேசு அவர்மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், "நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!" என்றார். உடனே தொழுநோய் அவரைவிட்டு நீங்க, அவர் நலமடைந்தார். பிறகு அவரிடம், "இதை யாருக்கும் சொல்லவேண்டாம், கவனமாய் இரும். ஆனால் நீர் போய் உம்மைக் குருவிடம் காட்டி, நோய் நீங்கியதற்காக மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கையைச் செலுத்தும். நீர் நலமடைந்துள்ளீர் என்பதற்கு அது சான்றாகும்" என்று மிகக்கண்டிப்பாகக் கூறி உடனடியாக அவரை அனுப்பி விட்டார். ஆனால் அவர் புறப்பட்டுச்சென்று இந்தச் செய்தியை எங்கும் அறிவித்துப் பரப்பிவந்தார். அதனால் இயேசு எந்த நகருக்குள்ளும் வெளிப்படையாய்ச் செல்ல முடியவில்லை. வெளியே தனிமையான இடங்களில் தங்கிவந்தார். எனினும் மக்கள் எல்லா இடங்களிலிருந்தும் அவரிடம் வந்து கொண்டிருந்தார்கள்.

**தியானம்:** எமது பிள்ளைகள் தமது தேவையை நிறைவேற்றுமாறு கேட்கும்போது "உனது தேவையை நீயே பூர்த்தி செய்துகொள்" என்று எந்தப் பெற்றோராவது தமது பிள்ளையிடம் கூறுவார்களா? எமது குழந்தைகள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையால் அவர்களது தேவைகளை நிறைவேற்ற எதிர்பார்த்து எம்மிடம் வருகிறார்கள். அவ்வாறாயின், தமது சாயலாக மனிதராக எம்மைப் படைத்துப், பராமரித்து வரும் பரலோக தகப்பன் மீது நாம் எவ்வளவு ஆழமான நம்பிக்கை வைக்கவேண்டும். அவ்வாறான நம்பிக்கையோடு இயேசுவின் காலத்தில் கலிலேயாவில் வாழ்ந்த ஒரு தொழுநோயாளியையே இன்றைய நற்செய்தியில் சந்திக்கின்றோம். தனது சொந்த ஊரில் எவராலுமோ, அல்லது தனது குடும்பத்தாராலோ நோயைக் குணப்படுத்த முடியாதென அத்தொழு நோயாளி நன்கறிந்திருந்தது மட்டுமல்ல, அனைவராலும் வெறுத்து ஒதுக்கப்பட்டு ஊருக்கு வெளியே வாழ்ந்தார். இருப்பினும், ஆண்டவர் இயேசுவில் அவர் வைத்திருந்த அசையாத நம்பிக்கையால் "நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" (மாற்கு1:40) என்கிறார். பெற்றோரிலும் மேலான அன்பு செலுத்தும் ஆண்டவர் இயேசுவால் இவ்வாறான வேண்டுதலை எவ்வாறு தட்டிக்கழிக்க முடியும்?. இற்றைக்கு 2018 வருடங்களுக்கு முன்னர் கலிலேயாவிலே அந்தத் தொழுநோயாளிக்குக் காட்டிய அதே சமனான அன்பையே 2018 வருடங்களின் பின்னரும் எங்கள் மீதும் ஆண்டவர் இயேசு அபரிதமாகப் பொழிகின்றார். இயேசுவின் அகல, நீள, ஆழம் காணமுடியாத அன்பை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோமா? இவ்வுலக மாயக்கவர்ச்சிகளின் பின்னே அலையும் நாம் எமது ஆன்மாவில் தொழுநோயாளியாக மட்டுமல்ல, ஆண்டவரின் சன்னிதியிலிருந்தும் விலகவும் முயற்சிக்கிறோம். திருப்பலி மற்றும் நாளாந்த செபித்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்காது நமது பாதையே சரியென வாழ்பவதனால், ஆண்டவரை விட்டு விலகியவர்களாகப் புறக்கணித்து ஒதுங்கி வாழ்ந்துவரும் "தொழு நோயாளி" நிலையிலிருந்து வெளிவருவோம். "நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என்று ஆண்டவர் இயேசுவை நோக்கி உரத்த குரலெழுப்புவோம். "நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக" என்று நிட்சயமாக எமக்கும் ஆண்டவர் இயேசு பதிலளிப்பார்.